*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*24 10 2025 FRIDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *நாடுமுழுவதும் இன்று நடைபெறும் வேலைவாய்ப்பு திருவிழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 51 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.*

- *ககன்யான் திட்டத்தின் முன்னோட்டமாக, ஆளில்லா விண்கலமான G-1, டிசம்பர் முதல் வாரத்தில் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

- *இந்தியா - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசின் துணை அமைச்சர் திரு. சுந்தரலிங்கம் பிரதீப் கூறியுள்ளார்.*

- *வங்கக்கடலில் இன்று புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

- *உலக கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 53 ரன் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வென்று, அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*நாடுமுழுவதும் 40 இடங்களில் இன்று நடைபெறும் வேலைவாய்ப்பு திருவிழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக பங்கேற்று, மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 51 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.*

*தமிழகத்தில், சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் இந்த வேலைவாய்ப்பு திருவிழா நடைபெறவுள்ளது.*

*சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.*

*திருச்சியில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரியும், மதுரையில் சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ்-ம் வேலைவாய்ப்பு திருவிழாவில் கலந்து கொள்கின்றனர்.*

*>>>>>>><<<<<<<*

*ககன்யான் விண்கலத்தை அனுப்புவதற்கான முன்னோட்டமாக, ஆளில்லா விண்கலமான G-1, டிசம்பர் முதல் வாரத்தில் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.*

*பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பரிசோதனை அடிப்படையிலான G-1 விண்கலத்தை செலுத்துவதற்கான பணிகள் 90 சதவீத அளவிற்கு நிறைவடைந்துள்ளதாகக் கூறினார்.*

*இந்த விண்கலத்தில், VyomaMitra எனப்படும் இயந்திர மனிதன் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் விண்கலம், வரும் 2027-ம் ஆண்டுக்குள் செலுத்தப்படும் என்றும், இந்தியாவைச் சேர்ந்த மூன்று விண்வெளி வீரர்களை அதில் அனுப்பி, திருப்பி அழைத்து வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*இந்திய விண்வெளி ஆய்வு நிலையம், 2035-ம் ஆண்டுக்குள் அமைக்கப்படும் என்றும் திரு.நாராயணன் தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<*

*இந்தியா - இலங்கை இடையேயான மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று இலங்கை தோட்டத் தொழில்துறை துணை அமைச்சர் திரு. சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.*

*தமிழகம் வந்துள்ள அவர். திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இருநாட்டு மீனவர்களும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தினால் சுமுக தீர்வுக்கு வழிவகை ஏற்படும் என்று குறிப்பிட்டார்.*

*இந்தியாவில் அகதிகளாக தங்கியுள்ள இலங்கை மக்கள் தாயகம் திரும்ப விரும்பினால், அவர்களை வரவேற்க தங்களது அரசு தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.*

*இந்தியா - இலங்கை இடையேயான நட்புறவு வலுவாக உள்ளதாகவும் திரு. சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<*

*கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக சிபிஐ தரப்பில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆவணங்கள் கரூர் குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.*

*இச்சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், விசாரணை நடத்தி வரும் சிபிஐ, ஏற்கனவே இதுகுறித்து சிறப்பு புலனாய்வு குழு மற்றும் ஒருநபர் ஆணையம் நடத்திய விசாரணை குறித்த விவரங்களும் தாக்கல் செய்யப்பட்டன.*

*>>>>>>><<<<<<<*

*வங்கக்கடலில் இன்று புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்றும் இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, தென்காசி. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.*

*திருப்பத்தூர் மாவட்டத்தில் பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாக, அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – அனுராதா 30 செகண்ட்ஸ்)*

*கரூர் மாவட்டம், குளித்தலை சுற்றுவட்டாரத்தில் பெய்த கனமழையால், மேட்டுமருதூர் பகுதியில் உள்ள கல்பாலம் சேதமடைந்து, அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.*

*கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளதை அடுத்து, மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – விஜயகுமார் 48 செகண்ட்ஸ்)*

*இதனிடையே, சென்னை அடையாறு முகத்துவாரப் பகுதியில் மழைநீர் தடையின்றி செல்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடையாற்றை சீரமைப்பதற்காக ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - மா.சு 30 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

இருவரிச் செய்திகள்

காஸா அமைதி உடன்படிக்கையை விரைந்து செயல்படுத்தும் வகையில், அமெரிக்க பல்வேறு நாடுகளுக்கு சிறப்பு தூதர்களை அனுப்பியுள்ளது.

>>>>>>><<<<<<<

ரஷ்ய போர் விமானங்கள் லித்துவேனியா வான் எல்லையில் அத்துமீறி பறந்ததாக அந்நாட்டு அதிபர் திரு. *Gitanas Nauseda* குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

செஞ்சிலுவை சங்கத்தில் சேவையாற்றும் இளைஞர்கள் மனிதநேய உணர்வுடன் பணியாற்றுமாறு நாகலாந்து முதலமைச்சர் திரு. *Neiphiu Rio* கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

சுதந்திர போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் ஜெயந்தி மற்றும் குருபூஜை விழாவிற்கான ஏற்பாடுகளை மாநில அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் ஆய்வு செய்தார்.

>>>>>>><<<<<<<

தமிழக வனத்துறை சார்பில் மாநிலம் முழுவதும் கடந்த ஒன்றரை மாதத்தில் 72 லட்சம் பனை விதைகள் நடப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

கோவையில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக, கரும்பு இனப்பெருக்க மையத்தின் 114வது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

வைகை அணையிலிருந்து பெரியாறு நீட்டிப்பு கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு இன்று முதல் 20 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

>>>>>>><<<<<<<

திருக்குறள் திருப்பணி திட்டத்தின், மூன்றாவது பயிலரங்கம் சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா ரயில் நிலையத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 53 ரன் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வென்று, அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

நவிமும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்த இந்தியா, மழை காரணமாக குறைக்கப்பட்ட 49 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 340 ரன் எடுத்தது.

Pratika Rawal அதிகபட்சமாச 122 ரன் குவித்தார்.

தொடர்ந்து மழை குறுக்கிட்டதன் காரணமாக, போட்டி 44 ஓவராக குறைக்கப்பட்டு, 325 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து, 8 விக்கெட் இழப்பிற்கு 271 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

>>>>>>><<<<<<<

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் கபடி பிரிவில் இந்தியா தங்கம் வென்றது.

மகளிர் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் Shourya Avinash வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் குண்டு எறிதல் பிரிவில் Jasmine Kaur வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Priya Malik வெண்கலப்பதக்கம் வென்றார்.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

**வியன்னா ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் *Andre Goransson* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

***>>>>>>><<<<<<<***